**நீதித்துறை நடுவர் எண்.3 நீதிமன்றம்,**

**ஈரோடு.**

**STC.No.2548/2025**

Date. 10.03.2025

பெயர்:ரேவதி

த/பெ.ராமசாமி

வழக்கு சாட்சி. அ.சா.1

(மனுவின் பேரில் சாட்சியை மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது)

**குறுக்கு விசாரணை**

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் என்ன தொழில் செய்து கொண்டு வருகிறேன் என்றால் எந்த வேலையும் செய்யவில்லை இல்லத்தரசியாக இருந்து வருகிறேன். 2024 ஆம் வருடமும் நான் எந்த வேலையும் செய்யவில்லை என்றால் சரிதான். நான் வருமான வரி கணக்கு தாக்கல் செய்கிறேனா என்றால் இல்லை. எனக்கு மாதம் எவ்வளவு வருமானம் வருகிறது என்பதை காண்பிக்க எந்த ஒரு ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எதிரியிடம் எப்போது, எவ்வளவு, எங்கே வைத்து பணம் கேட்டார் என்றால் 27.01.2024 ஆம் தேதி என் வீட்டில் வைத்து ரூபாய் இருபது லட்சம் பணம் கேட்டார். நான் அப்போது என்ன கூறினேன் என்றால் கால அவகாசம் கேட்டேன்.

2. பின்னர் எப்போது நான் பணம் கொடுத்தேன் என்றால் 04.02.2024 ஆம் தேதி ரூபாய் ஒன்பது லட்சம் பணம் கொடுத்தேன். மேற்படி தேதியில் என்னிடம் மேற்படித்தொகை இருந்தது என்பதை காண்பிக்க எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அவ்வாறு ஆவணம் உள்ளதா என்றால் வங்கி கணக்கில் அந்த சமயத்தில் பணம் இருந்தது. ரூபாய் ஒன்பது லட்சம் தொகைக்கு 54493 என்ற காசோலை கொடுக்கப்பட்டது என்றும், ரூபாய் 11 லட்சம் தொகைக்கு 54494 என்ற காசோலை கொடுக்கப்பட்டதாக வழக்கறிஞர் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3. மேற்படி இரண்டு காசோலைகளை கொடுத்து தான் எதிரி என்னிடம் பணம் வாங்கியதாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வழக்கறிஞர் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள காசோலைகள் வேறு என்பதாலும், வழக்கில் குறிப்பிட்டுள்ள காசோலைகள் வேறு என்பதாலும், எதிரிக்கு எதிராக இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. ரூபாய் 20 லட்சம் கடன் கொடுக்கும் அளவிற்கு எனக்கு வசதி இல்லை என்றால் சரியல்ல.

4. நான் சொல்லும் தேதியில், சொன்ன இடத்தில் வைத்து எதிரி என்னிடம் பணம் எதுவும் வாங்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் பதில் அறிவிப்பு எதிரி தனது வழக்கறிஞர் மூலம் அனுப்பிய அறிவிப்பு தான். **(04.06.2024 தேதியிட்ட பதில் அறிவிப்பு எ.த.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** எதிரி எனக்கு என்ன உறவு என்றால் எனது மாமியாரின் அண்ணனின் பேரன் ஆகும். எனக்கு இரண்டு மகள்கள் உள்ளார்கள் என்றும் அதில் ப்ரீத்தி என்பவர் அமெரிக்காவில் வசித்து வருகிறார் என்றும் சொன்னால் சரிதான்.

5. கடந்த டிசம்பர் 2015 ஆம் வருடம் எனது மகள் ப்ரீத்தி இந்தியாவில் நிலம் வாங்குவதற்காக பண பரிமாற்றத்திற்காக எதிரியின் IOB வங்கியின் 544993 மற்றும் 544994 என்ற இரண்டு வெற்று காசோலைகளை எதிரி என்னிடம் கொடுத்திருந்தார் என்றால் இல்லை. என் மகள் பிரீத்தி இந்தியாவில் நிலம் வாங்கவில்லை என்றும், அதனால் மேற்படி இரண்டு காசோலைகளையும் திருப்பி தருமாறு எதிரி என்னிடம் பலமுறை கேட்டார் என்றும், ஆனால் நான் ஏதாவது காரணம் கூறி காசோலைகளை திருப்பி கொடுக்காமல் வைத்திருந்தேன் என்றால் சரியல்ல.

6. நானும் எதிரியும் நெருங்கிய உறவினர்கள் என்பதால் மேற்படி காசோலைகளை திரும்ப பெறுவதற்கு எதிரி கடுமையாக முயற்சிக்கவில்லை என்றால் சரியல்ல. பூர்வீக சொத்து சம்பந்தமாக எனக்கும் எதிரியின் குடும்பத்திற்கும் மனஸ்தாபம் ஏற்பட்டதால் மேற்படி காசோலைகளை பூர்த்தி செய்து எதிரி மீது இந்த பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி காசோலைகள் இரண்டும் கடந்த 2014 ஆம் வருடம் எதிரிக்கு வங்கியில் கொடுத்த காசோலைகள்

என்றும், உண்மையில் நான் எதிரிக்கு பணம் கொடுத்து இருந்தால் 2024 ஆம் வருட காசோலைகளை பெற்றிருப்பேன் என்றும் சொன்னால் சரியல்ல.

7. நான் சொன்ன தேதியில், எதிரிக்கு பணம் ரூபாய் 20 லட்சம் கொடுக்கவில்லை என்றும், எதிரி இவ்வழக்கு காசோலைகளை எனக்கு கொடுக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. எதிரியிடமிருந்து பணம் பறிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அறிவிப்பில் கூறியுள்ள காசோலைகள் சம்பந்தமாக வழக்கு தாக்கல் செய்யாமல் வேறு காசோலைகள் சம்பந்தமாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

S R BABU

Digitally signed by S R BABU
Date: 2026.03.10 17:15:36 -0800

Judicial Magistrate No.III,

Erode.